FWC

# யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

## Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

## Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

> சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01) பெர்லோ தொடர்பாடல் மாதிரியில் தொடர்பாடல் செயன்முறை வினைத்திறன் மிக்கதாக அமைவதற்கு அனுப்புநர் பெறுநர் ஒத்தநிலை அம்சங்கள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றார். பின்வரும் அம்சங்களில் அவற்றில் உள்ளடக்கப்பட முடியாதது

(1) அனுப்புநர் - பெறுநர் தொடர்பு செயற்றிறன் ஒத்தநிலை
(2) அனுப்புநர் - பெறுநர் மனப்பான்மை ஒத்தநிலை
(3) அனுப்புநர் - பெறுநர் அறிவு ஒத்த நிலை
(4) அனுப்புநர் பெறுநர் நடத்தை ஒத்த நிலை
(5) அனுப்புநர் - பெறுநர் கலாசார ஒத்த நிலை

02) பேச்சு, கொந்நிலை, நடத்தைக் கோலம் இணைவதால்

(1) உரையாடல் செயன்முறை உருவாதல்
(2) ஆற்றுகைச் செயன்முறை உருவாதல்
(3) பிரதியாக்கச் செயன்முறை உருவாதல்
(4) விபரணச் செயன்முறை உருவாதல்
(5) பேச்சு செயன்முறை உருவாதல்

03) இசைந்து வாழ்தல் எண்ணக்கருவுடன் தொடர்பற்றது

(1) சுயகௌரவம் (2) சுயநலமின்மை (3) பொறுமை
(4) புரிந்துணர்வு (5) விட்டுக்கொடுப்பு

agaram.lk

04) "பாடப்புத்தகம் ஒன்றில் உள்ள விடயதானங்களை விளங்கிக்கொள்ளுகின்ற முயற்சி" தொடர்பாடல் செயன்முறையில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது

(1) குறிமுறைய / விழப்புச் செயன்முறை
(2) குறிமுறையாக்கச் செயன்முறை
(3) வியாக்கியானச் செயன்முறை
(4) பின்னூட்டல் செயன்முறை
(5) பரிமாற்ற அல்லது கடத்தல் செயன்முறை

05) ஊடகம் அரசின் ஆதிக்கத்திற்குட்பட்டது. அரசையும் பத்திரிகையையும் பிரிக்க முடியாது. தொழிலாளர் நல கருத்தியலுக்கு பொருத்தமான தொடர்பாடல் எண்ணக்கரு

(1) ஜனநாயக தொடர்பாடல் எண்ணக்கரு
(2) அபிவிருத்தி தொடர்பாடல் எண்ணக்கரு
(3) சமூக பொறுப்பு தொடர்பாடல் எண்ணக்கரு
(4) ஆதிக்க தொடர்பாடல் எண்ணக்கரு
(5) சோவியத் பொதுவுடமை தொடர்பாடல் எண்ணக்கரு

06) வானொலி ஊடக ஆய்வு ஒன்றின் மூலம் எதிர்பார்க்க கூடிய அனுகூலம் அல்லாதது

(1) நேயர்கள் வானொலி நிகழ்ச்சியில் பங்குகொள்ள முடியும்
(2) செவிமடு வலயம் என்னவெனக் கண்டறிய முடியும்
(3) செவிமடுப்போர் மனப்பாங்கை அறிய முடியும்
(4) செவிமடுப்போர் விருப்பு வெறுப்பை விளங்கிக்கொள்ள முடியும்
(5) வானொலி செயற்பாட்டு உள்ளடக்கத்தை மாற்றியமைக்க முடியும்



Scanned with CamScanner

07) ஊடகங்களின் செயற்பாடுகளை விஞ்ஞான முறையூடாக ஆராய்கின்ற செயன்முறை ஊடக ஆய்வுக்குட்பட்டதாகும். பகுப்பாய்வின் ஊடாக இனங்காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்தல் செயற்பாடு பின்வருமாறு அழைக்கப்படும்.

(1) தகவல் சேகரித்தல்
(2) தகவல் பகுப்பாய்வு
(3) மதிப்பீட்டு செயன்முறை
(4) பிரச்சினை இனங்காணல்
(5) முன்மொழிவுகள்


08) "பத்திரிகையில் வலிமை, வேகம், கொடூரம் போன்ற படங்களை பிரசுரிக்கின்ற பொழுது ஆண்களின் படங்களையும், மென்மை, இரக்கம், கவர்ச்சி காட்சிகளுக்கு பெண்களின் படங்களையும் பிரசுரித்தல் நிரந்தரமாக்கப்பட்டுள்ளது" மேற்படிமுறை அழைக்கப்படுவது

(1) மாறா எண்ணக்கரு
(2) சமூகமயமாக்கல் எண்ணக்கரு
(3) கலாசார எண்ணக்கரு
(4) காட்சிமொழி எண்ணக்கரு
(5) சமூகநியம எண்ணக்கரு

09) அபிவிருத்தி தொடர்பியலுக்கான இரு படிமுறை கட்டமைப்பை முன்வைத்தவர்

(1) டேனியல்லேனர்
(2) வில்பர் ஷிராம்
(3) வெரெட் எம். ரோஜஸ்
(4) லயார் பீல்ட்
(5) போல் டீ ஸ்டீவன்

10)




மேற்படி வரிப்படம் ஞாபகச் செயலொழுங்கு இடம்பெறுகின்ற வழிமுறையையும் அவற்றின் சதவீதத்தையும் காட்டுவதாக அமைகின்றது. அதன்படி A, B, C, D, E, F குறிக்கும் ஞாபக செயன்முறைக்கான வழிமுறையை ஒழுங்குமுறையே குறிப்பது.

(1) வாசிப்பு, கேட்டல், பார்த்தலும் கேட்டலும், பார்த்தல் செயன்முறை, எழுதி வாசித்தல்
(2) வாசிப்பு, கேட்டல், பார்த்தல், எழுதி வாசித்தல், பார்த்தலும் கேட்டலும், செயன்முறை
(3) வாசிப்பு, பார்த்தலும் கேட்டலும், பார்த்தல் கேட்டல், எழுதிவாசித்தல், செயன்முறை
(4) வாசிப்பு, பாரத்தல், கேட்டல், எழுதி வாசித்தல் பார்த்தலும் கேட்டலும், செயன்முறை
(5) வாசிப்பு, கேட்டல், பார்த்தல், பார்த்தலும், கேட்டலும், எழுதி வாசித்தல், செயன்முறை

11) முரண்பாட்டு சூழ்நிலை உருவாவதற்கு ஏற்புடைய கலாசாரமாக அமையக்கூடியது

(1) அறிவு சமூக கலாசாரம்
(2) வெகுசன ஊடக கலாசாரம்
(3) மேலைத்தேய கலாசாரம்
(4) கீழைத்தேய கலாசாரம்
(5) பல்லின சமூக கலாசாரம்



agaram.lk
Scanned with CamScanner

12) மாற்று ஊடக மற்றும் எதிர்ப்பு ஊடக இயல்புகள் பின்வருமாறு

A – உள்ளடக்கம் பிரதான ஊடக நீரோட்டத்தில் இருந்து வேறுபட்டது.

B – பங்குபற்றல் தன்மையை மேம்படுத்தல்

C – மக்கள்மயம் வலுப்பெறல்

D – வெகுஜன ஜனரஞ்சக நுகர்வு கலாசாரத்திற்கு முற்றிலும் மாறுபட்டது.

E – சமூகத்தின் சிந்தனையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்படுதல்.

மாற்று ஊடகம் மற்றும் எதிர்ப்பு ஊடக இயல்புகளை மிகப்பொருத்தமாக பிரதிபலிப்பன

(1) A, B ஆகியன மாத்திரம்

(2) A, B, E ஆகியன மாத்திரம்

(3) B, C, D ஆகியன மாத்திரம்

(4) A, D, E ஆகியன மாத்திரம்

(5) A, C, D, E ஆகியன மாத்திரம்

13) ஊடகக்கலாசாரமும், சமூகமாற்றமும் பற்றிய கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – ஊடகக் கலாசாரத்தின் நிமித்தம் ஏற்படும் சமூக மாற்றத்தினால் கலாசார மோதல் ஏற்படுகின்றன.

B – சமூகத்தின் உணர்வுபூர்வமான நடத்தைகள் மீது ஊடக கலாசாரம் மேலோட்டமான தாக்கத்தை செலுத்துகின்றன.

C – சிறுவர், இளைஞர், பெண்களின் நடத்தைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

அவற்றுள் மிகச் சரியாக அமைவன.

(1) A மட்டும்

(2) B மட்டும்

(3) A யும் C யும் மட்டும்

(4) B யும் C யும் மட்டும்

(5) A, B, C எல்லாம்

agaram.lk

14) "ஞாபகத்தில் பதிவு செய்தல் செயன்முறை மூளையின் ஆற்றலுடன் தொடர்புபட்டதாகும்" பின்வருவனவற்றில் இடது மூளையின் ஆற்றல்கள் பற்றி உளவியலாளர்கள் குறிப்பிடும் செயன்முறை தொகுதியாக அமையக்கூடியது

(1) கணித ஆற்றல், வகைப்படுத்தல்

(2) இனங்காணல், தர்க்கம்

(3) வகைப்படுத்தல், ஆக்கத்திறன்

(4) பகுத்தறிவு, ஆக்கத்திறன்

(5) விமர்சனம், சிக்கலான கோலம் பற்றி புலக்காட்சி

15) ஊடக விமர்சனத்தின் சமூகத் தேவையை பிரதிபலிக்காதது

(1) ஊடக உள்ளடக்க இயல்பையும் நிகழ்ச்சி நிரலையும் வெளிக்காட்டாது

(2) மக்களை மந்த நிலையில் இருந்து செயற்படும் நிலைக்கு மாற்றியமைத்தல்

(3) ஊடகம் - பெறுநர் தொடர்பை விளங்கிக் கொள்ளல்

(4) ஊடக அறிவு பற்றிய விழிப்புணர்வை உயர் மட்டத்திற்கு இட்டுச் செல்லும்

(5) ஊடகத்தின் சமூக வகிபங்கு கலாசார தாக்கம் பற்றிய போக்குகளை அறியச் செய்தல்



Scanned with CamScanner

16) "ஊடகங்கள் குறிப்பிட்ட கால சமூகத்தின் கலாசாரம், பழக்கவழக்கம், நடத்தை மற்றும் சம்பிரதாயங்களை அறிக்கையிடுகின்றன" இவ்வாறான அம்சங்களை விமர்சனம் செய்கின்ற பிரவேசம்

(1) பண்பாட்டு ரீதியான பிரவேசம்

(2) அரசியல் ரீதியான பிரவேசம்

(3) மொழி ரீதியிலான பிரவேசம்

(4) ஒப்பீட்டு ரீதியிலான பிரவேசம்

(5) வரலாற்று ரீதியிலான பிரவேசம்

17) ஊடக அறிவித்தல் (Press Release) செயன்முறையின் இயல்பாக கொள்ள முடியாதது

(1) அனைத்து ஊடகங்களுக்கும் பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்டிருத்தல்

(2) அறிவித்தலில் உத்தியோக பூர்வ ஒப்பம் இடப்பட்டு இருத்தல்

(3) அறிவித்தலில் உள்ளடக்க தகவல்கள் பொருத்தமானதாக அமைந்திருத்தல்

(4) அறிவித்தலின் உள்ளடக்கம் பரந்துபட்ட நோக்கங்களை கொண்டதாக இருத்தல்

(5) அறிவித்தலுக்கான தகவல் கவனமாக தெரிவு செய்யப்பட்டிருத்தல்

18) ஊடகக்கழகத்தின் செயற்திட்ட ஒழுங்கமைப்பாளர்களினால் முன்னெடுக்கப்படக்கூடிய ஆக்கச் செயற்றிட்டத்திற்கு எடுத்துக்காட்டுகளாக அமைவன.

(1) சுவர்ப்பத்திரிகை வெளியீடு, புகைப்படக்கண்காட்சி

(2) கவிதை ஆக்கம், செய்தி எழுதுதல்

(3) மாணவர் கற்றலுக்காக தொலைக்காட்சியை பயன்படுத்துவது தொடர்பான ஆய்வு, பாடசாலை மாணவர்களின் பத்திரிகை வாசிப்பு தொடர்பான ஆய்வு

(4) நல்ல பாடல்களை இரசித்தல், நாடகம் ஒன்றை விமர்சித்தல்

(5) சமாதானம் தொடர்பான பாடல் தயாரிப்பு, காட்டூன் கண்காட்சி

19) A – வழிகாட்டல்,

B – எச்சரிக்கைவிடுதல்,

C – பொது உடன்பாட்டை பெறுதல்

D – பிரச்சினை தீர்த்தல்

E – ஞாபகப்படுத்தல்

இவற்றில் குழுத்தொடர்பு, தன்னகத்தொடர்பு இயல்புகளாக அமைவன முறையே

1) A யும் C யும் (2) B யும் E யும் (3) C யும் E யும்

4) D யும் E யும் (5) B யும் D யும்

20) ஊடக ஆய்வு ஒன்றிற்காக தகவல் திரட்டுவதற்கான வினாக்கொத்து ஒன்றை தயாரிக்கின்றபோது பின்பற்ற வேண்டிய நடைமுறையாக அமைவது

(1) அதிக தகவலை பெற அதிக எண்ணிக்கையிலான வினாக்களை உள்ளடக்குதல்

(2) விபரமான பின்னணி விடயங்களை பெறும் வகையில் வினாக்களை வடிவமைத்தல்

(3) குறுகியதும், தெளிவானதுமான விடைகளைப் பெறும் வகையில் வினாக்களை ஒழுங்கமைத்தல்

(4) ஆழமான விடைகளை காரண காரியத் தொடர்புடன் ஒழுங்கமைத்தல்

(5) ஆர்வமூட்டுகின்ற வகையில் அதிக தகவலைப் பெறும் வகையிலும் உள்ளடக்குதல்

21) பின்வருவனவற்றில் அபிவிருத்தி ஊடகவியலின் இயல்பை பிரதிபலிக்காதது

(1) மக்கள் சிந்தனையிலும், சமூக அமைப்புக்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவை

(2) பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

(3) அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் இடையில் தகவல் தொடர்பை உருவாக்கி கொடுத்தல்

(4) பிரச்சினைகளில் மேலோட்டமாக கவனம் செலுத்துகின்றது. அதே வேளை சம்பந்தப்பட்ட நபர்களில் அதீத கவனம் செலுத்துகின்றது

(5) மக்கள் பிரச்சினைகளை அவற்றை தீர்ப்பதற்கான செயல்முறைகளை கவனத்தில் கொள்கின்றன



agaram.lk

Scanned with CamScanner

22) வெகுஜன ஊடகத் தகவலின் மிக முனைப்பான இயல்பாகக் காணப்படுவது
(1) தினசரியாக இருத்தல்
(2) வரலாறாக இருப்பது
(3) சிக்கல் தன்மையுடன் இருப்பது
(4) பொழுதுபோக்கு
(5) பல்வகைத் தன்மை

23) மக்கள் விரும்பும் பிரபல்யமான கலாசார உரையாடல் ஒன்றில் முன்வைக்கப்பட்ட சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன
A – ஒவ்வொரு சமூக வகுப்பினையும் கவரும்
B – பாரியளவிலான உற்பத்தியும் பரம்பலுமிருக்கும்
C – உயரளவிலான தலைமைத்துவப் பெறுமானம் உடையது
D – வணிகத்துறையுடன் தொடர்புபட்டது
E – தொழிலாளரிடையே விரைவாகப் பரவும்
பிரபல்யமான கலாசாரத்துடன் மிக உகந்ததாக இருக்கக்கூடியது
(1) A, B, C,D (2) A, B, C, E (3) A, B, D, B
(4) B, C, D, E (5) A, B, C, D, E ஆகிய எல்லாம்

24) ஊடக விளம்பரம் என்பதன் பொருள்
A – சமூகத் தேவைகளை நிறைவேற்றல்
B – வர்த்தகத் தேவைகளை நிறைவேற்றல்
C – சமூக நடத்தையை மாற்றல்
D – பொது மக்கள் கருத்தியல்களை மாற்றல்
E – பண்புள்ள நேர் ஊக்கல்
மேற்குறித்த கூற்றுக்களுள்
(1) A, B, C, D ஆகியன உண்மையானவை அதேவேளை B பொய்யானது
(2) A, B, C, E ஆகியன உண்மையானவை அதேவேளை D பொய்யானது
(3) A, B, D, E ஆகியன உண்மையானவை அதேவேளை B பொய்யானது
(4) A, C, D, E ஆகியன உண்மையானவை அதேவேளை B பொய்யானது
(5) B, C, D, E ஆகியன உணமையானவை அதே வேளை A பொய்யானது

agaram.lk

25) தகவல்களை ஊடுகடத்துவற்கான சில முறைகள் கீழே தரப்பட்டள்ளன.
A – தொலைபேசிச்சேவை பொருத்துதல்
B – செல்லிடத் தொலைபேசிச் சேவை
C – சாதாரண தபால் சேவை
D – மின்னஞ்சல் சேவை
E - குறுஞ்செய்திச்சேவை (sms)
அவற்றுள் ஆளிடைத்தொடர்பாடல் அலைவழிகளுள் பயன்படுத்தக் கூடியவை யாவை
(1) A, B மாத்திரம்
(2) A, B,D மாத்திரம்
(3) A, B, D, E மாத்திரம்
(4) A, B, C, D மாத்திரம்
(5) A, B, C, D, E ஆகிய எல்லாம்



Scanned with CamScanner

26) அபிவிருத்தித் திட்டங்களை தயார்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஐந்து குறிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

A – திட்டத்தின் கால அளவு

B – திட்டத்தின் மதிப்பீடு

C – திட்டப்பகுதியின் புவிசார் காரணிகள்

D – திட்டத்தின் இலக்கு வைக்கப்படும் சமூகம்

E – திட்டம் சம்பந்தமான விடயங்கள்

மேற்குறித்த குறிப்புக்களின் முக்கியத்துவத்தை குறிப்பிடும் வரிசைக்கிரமமாக அமைவது

(1) A, B, C, D, E
(2) A, D, C, E, B
(3) B, A, C, E, D
(4) C, D, B, E, A
(5) D, E, C, B, A

27) பொதுவான சமூக இலக்குகளை பாதுகாத்துக்கொள்ளவும் சமூகக் குறிக்கோளை பூர்த்தி செய்து கொள்ளவும் ஓர் அரசாங்கம் பின்பற்ற வேண்டிய முக்கியத்துவம் குறைந்த முறையியலாக அமைவது

(1) ஊடக ஒழுங்கமைப்புக் கட்டமைப்பை உருவாக்குதல்
(2) ஊடகத் தணிக்கையை செயற்படுத்துதல்
(3) ஊடகக் கலாசாரத்தை வலுப்படுத்துதல்
(4) ஊடகவியலாளர்களை பயிற்றுவித்தல்
(5) ஊடக எழுத்தறிவை முன்னெடுத்தல்

28) பேராசிரியர் ஜொஹான் கல்துங் இன் முரண்பாட்டு முக்கோணியில் (Triangle of conflicts) முக்கிய கூறுகளாக அமைவன

(1) கட்டமைப்பு, உளப்பாங்குகள், நடத்தை
(2) உளப்பாங்குகள், உடன்பாடின்மை, நடத்தை
(3) புரிந்துணர்வின்மை, உளப்பாங்குகள், நடத்தை
(4) கட்டமைப்பு, உரித்தாளர்கள், உளப்பாங்குகள்
(5) உரித்தாளர்கள், உடன்பாடின்மை, உளப்பாங்குகன்

29) சர்வதேச தேதியில் கலாசார வளர்ச்சிக்கு விஞ்ஞான தளத்தில் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக அமைவது

(1) சர்வதேச மன்னிப்புச்சபை (2) சர்வதேச நாணய நிதியம் (3) உலக வங்கி
(4) உலக சுகாதார நிறுவனம் (5) யுனெஸ்கோ

30) தொடர்பாடல் சென்முறையின் உள்ளடக்கம் (Content) என்பது

(1) தொடர்பாடல் சந்தர்ப்பம் (2) விளைவு (3) பார்வையாளர்
(4) செய்தி (5) ஊடகம்

31) ஜோன் மில்ட்டன், ஜோன் லொக், தோமஸ் ஜெவ்வர்கள், ஸ்ருவர்ட்மில் ஆகியோரின் சிந்தனைகள் கலந்துரையாடப்படுவது

(1) அதிகார ஆதிக்கக் கோட்பாட்டில்
(2) சோவியத் கம்யூனிஸ்ட் கோட்பாட்டில்
(3) சமூகப் பொறுப்புக் கோட்பாட்டில்
(4) தாராண்மைவாதக் கோட்பாட்டில்
(5) புரட்சிவாதக் கோட்பாட்டில்



agaram.lk
Scanned with CamScanner

32) மரபுசார்ந்த சமூகம் ஒன்றின் பண்பாட்டுச் சிறப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது
(1) உலகப் பண்பாடு (2) வெகுஜனப் பண்பாடு (3) நாட்டாரியற் பண்பாடு
(4) பிரசித்த பண்பாடு (5) செம்மைப் பண்பாடு (Classical Culture)

33) நாட்டாரியல் ஊடகம் (Folk media) தொடர்பில் பொருத்தமற்ற கூற்றைத் தெரிக.
(1) பெரும்பாலும் வாய்மொழி வழியானது
(2) தலைமுறை தலைமுறையாக வந்து சேர்வது
(3) ஒரேயொரு வடிவத்தை மட்டும் உடையது
(4) வழக்கமாக யாரால் பிறப்பிக்கப்பட்டது என்பது தெரிய முடியாதது
(5) சமூகமயமாதலுக்கான ஒரு முகவர்

34) ஆளிடைத் தொடர்பாடலுக்குப் பொருத்தமற்ற கூற்றாக அமைவது
(1) இருவருக்கிடையிலான தொடர்பாடல் வழிமுறையாகும்
(2) சிலவேளைகளில் தொழினுட்பக் கருவிகள் பயன்படுத்தப்படும்
(3) தொடர்பியலாளருக்கும் பெறுநருக்கும் இடையே நேரிடையான உறவுநிலை காணப்படும்
(4) எதிர்வினைகளும் பின்னூட்டமும் தாமதமாகக் காட்டப்படும்
(5) மின்னஞ்சலும் கூட இந்த நோக்கத்தில் பயன்படுத்தப்பட முடியும்

35) பின்வருவனவற்றில் பொதுமக்கள் தொடர்பு (Public Relation) நோக்கத்தை பிரதிபலிப்பது
(1) மக்கள் குழுவிடம் பயனுறுதிமிக்க தொடர்புகளை பேணுதல்
(2) முறைசார் நிதிமுகாமையை பேணுதல்
(3) வெகுசன ஊடகங்களை நன்றாக பயன்படுத்துதல்
(4) பல்வேறு தரப்பினரிடம் பொறுப்புக்களை கையளித்தல்
(5) திட்டத்தைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்

36) நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டும், பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டும் உடன்பாட்டினை எட்டவும் பயன்படும் தொடர்பாடல் வகை
(1) கூட்டுத் தொடர்பாடல் (2) நபரகத் தொடர்பாடல் (3) நபரிடைத் தொடர்பாடல்
(4) வெகுசனத் தொடர்பாடல் (5) நிறுவனத் தொடர்பாடல்

agaram.lk

37) "வெகுசன ஊடக செய்தி அறிக்கையிடல்கள் முரண்பாட்டு நிலைமைகளை தோற்றுவிக்கின்றன" இதனடிப்படையில் செய்தி ஒன்றின் செம்மை மற்றும் துல்லியம் தீர்மானிக்கப்படுவது
(1) செய்தி நிருபர் ஒருவரின் எழுத்தாற்றலில்
(2) செய்தி நிருபரின் விவேகத்தில்
(3) செய்தி ஆசிரியரின் விவேகத்தில்
(4) செய்தி தெரிவு செய்கின்ற ஆசிரியரின் திறமையில்
(5) செய்தி நிருபர் தெரிவு செய்கின்ற தகவல் மூலாதாரங்களில்

38) பின்வருவனவற்றுள் எது தொடர்பாடலின் அடிப்படைக் கூறாக அமையாதது?
(1) மூலம் (2) இடையூறு (3) பின்னூட்டம்
(4) வாயிற்காப்போர் (5) தொடர்பாடல் வழி (Channel)

39) நாட்டாரியல் கற்கையானது வெகுசன ஊடகச் செய்திகளை சிறப்புடையதாக்கும் வகையில் அனுகூலமாவது
(1) வரலாற்று நிகழ்வுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு
(2) பொதுமக்கள் வாழ்வில் உள்ள நிலைமைகளை கற்றுக்கொள்வதற்கு
(3) மனிதத்தத்துவத்தின் ஆழத்தை அவதானிப்பதற்கு
(4) படைப்பாக்க அணுகுமுறையை வலுப்படுத்துவதற்கு
(5) பொழுதுபோக்கினைப் பெற்றுக்கொள்வதற்கு



Scanned with CamScanner

40) குறித்தவொரு பால் உணவுக் கம்பனியின் உற்பத்திப் பொருட்கள் கதிரியக்கச் சோதனையில் மூன்றாவது தடவையாகவும் தோல்வியடைந்துவிட்டதாக அரச தரச்சோதனை நிறுவனமொன்று அறிவிப்பு விடுத்தது. நீங்கள் அந்தக் கம்பனியின் வெகுசனத் தொடர்பு அதிகாரியாக இருந்திருந்தால் உங்களது உடனடி நடவடிக்கையாக அமையக்கூடியது

(1) சோதனை முடிவுகள் தவறானவையெனச் சுட்டிக்காட்டும் ஊடக அறிக்கையொன்றை விடுத்தல்

(2) அரச தரச்சோதனை நிறுவனத்துக்கு எதிராக நுகர்வோரின் எதிர்ப்புப் போராட்டமொன்றை ஒழுங்கு செய்தல்

(3) வணிக நீதிமன்றில் கதிரியக்கச் சோதனைக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்தல்

(4) சந்தையிலிருந்து சம்பந்தப்பட்ட பொருட்களை வாபஸ் பெற்று அதனை வெகுசன ஊடகங்கள் வழியாக அறிவித்தல்

(5) சம்பந்தப்பட்ட பொருட்களை வேறு குறிப்பிட்டு பெயரின் கீழ் சந்தைக்கு மீள் விநியோகித்தல்

41) "அபிவிருத்தி என்பது பொருளாதாரம், சமூகம், கலாசாரம் நல்லொழுக்கம் எனும் நான்கு பிரிவுகளில் பூரணப்படுத்தப்படும் நிலை" என அபிவிருத்தியை வரைவிலக்கணம் செய்தவர்

(1) பேராசிரியர் விமல் திசாநாயக்க

(2) டட்லி ஸியர்ஸ்

(3) எவரட் எம் ரோஜக்ஸ்

(4) வில்பர் ஸ்ஷராப்

(5) போல் பீ ஸ்டீவன்

42) நேர்முகக் கலந்துரையாடல் (Interviews) ஊடாக எட்டப்பட முடியாதது

(1) உடன்படிக்கை உருவாக்கலாம்

(2) கருத்துக்கள் வெளிக்கொணரப்படலாம்

(3) பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம்

(4) மறைந்து காணப்படும் விடயங்கள் வெளிப்படுத்தப்படலாம்

(5) தனிப்பட்ட கருத்தியல் மேலாதிக்கம் இடம்பெறலாம்

43) கற்றல் தொடர்பான களை அறிக்கைக் கொள்கையை முன்வைத்தவர்கள்

(1) தோண்டைக் ஸ்கின்னர்

(2) ஸ்கின்னர் பவ்லவ்

(3) தோண்டைக் கேட்லூவின்

(4) கேட்லூவின் ரோல்மன்

(5) குத்ரி, ஸ்கின்னர்

44) அபிவிருத்தி தொடர்பியலின் வகிபங்காக அமைவன

(1) நடத்தை மாற்றம், ஊக்கப்படுத்தல், பங்குபற்றுதல்

(2) முரண்நிலை, பங்குபற்றுதல், எழுச்சி நிலைக்கு உட்படுத்தல்

(3) ஊக்கப்படுத்தல், சமூகமயமாக்கல், விழிப்புணர்வு

(4) இடைத்தொடர்பு, முரண்நிலை, சமூகமயப்படுத்தல்

(5) சமூகமயப்படுத்தல், இடைத்தொடர்பு, பங்குபற்றுதல்

45) தகவல்களை வழங்குதல் தொடர்புபட்டமைவது

(1) அழகியல் ஊடக பிரதிநிதித்துவத்துடன்

(2) அறிவுசார் ஊடக பிரதிநிதித்துவத்துடன்

(3) கட்டுருவாக்க ஊடக பிரதிநிதித்துவத்துடன்

(4) சமூக ஊடக பிரதிநிதித்துவத்துடன்

(5) பொருளாதார ஊடக பிரதிநிதித்துவத்துடன்



agaram.lk
Scanned with CamScanner

46) பிறரது கவனத்தை பெறுதல், பாராட்டுக்களை பெறுதல் என்பன மாஸ்லோவின் தேவைக்கூம்பில்
(1) உடல்சார் தேவைக்குள் உள்ளடக்கப்படும்
(2) அன்புரிமை தேவைக்குள் உள்ளடக்கப்படும்
(3) மதிப்புத் தேவைக்குகள் உள்ளடக்கப்படும்
(4) காப்புத் தேவைக்குள் உள்ளடக்கப்படும்
(5) பாதுகாப்புத் தேவைக்குள் உள்ளடக்கப்படும்

47) சொற்சோடிகள், கவிதைகள் அடையாளங்கள் ஊடாக தகவல்களை ஞாபகப்படுத்தல்முறை
(1) கற்பனை செய்தல்
(2) எண்ணக்கருப்படவாக்கம்
(3) கோவைப்படுத்தல்
(4) பயிற்சி
(5) மீட்டல்

48) ஆக்கரீதியான தொடர்பாடல் வடிவங்களில் விபரண எழுத்துகளும் உள்ளடங்குகின்றன. பின்வருவனவற்றுள் விபரண எழுத்து வடிவத்தின் இயல்பாக அமையாதது
(1) தகவல்களை உள்ளவாறு அறிக்கையிடுவன (Reporting)
(2) உணர்வூட்டுவன (Feelings)
(3) உணர்ச்சியூட்டுவன (Emotions)
(4) உணர்வுப் பெறுமானமூட்டுவன (Sentiments)
(5) பெயர்ச் சொற்களை விபரிக்கும் சொற்களைக் கொண்டமைந்தன (Adjectives)

49) பொதுசனத் தொடர்பியலாளர் (PRO) ஒருவரிடம் அவதானிக்கப்படக்கூடிய இயல்புகள் கீழே தரப்படுகின்றன.
A – நட்புணர்வு, மதிப்பளித்தல், இணக்கத்தன்மை
B – பரந்த மனப்பான்மை, சுயமதிப்பீடு, சுயகட்டுப்பாடு
C – பொது உளப்பாங்கு, திட்டமிடல், அறிக்கையிடல் திறன்
இவற்றுள் பொதுசனத் தொடர்பியலாளர் பண்புகளாக உள்ளடக்கப்பட்டிருப்பது
(1) A யில் மட்டும்
(2) A யிலும் C யிலும் மட்டும்
(3) B யிலும் C யிலும் மட்டும்
(4) A யிலும் B யிலும் மட்டும்
(5) A, B, C ஆகியன எல்லாவற்றிலும்

50) வன்முறை கவர்ச்சி எண்ணக்கரு (The Violent is Attractive) தொடர்பான கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A – வன்முறை நிகழ்ச்சிகள் மனிதனை கவரக்கூடியது
B – ஊடக இலாப நோக்கிற்கு வன்முறை கவர்ச்சி முக்கிய பங்கு வகிக்கின்றது
C – பத்திரிகையில் குற்றங்கள், விபத்துக்கள் முதற்பக்கத்தில் உள்ளடக்கப்படுவது வன்முறை கவர்ச்சியின் அடிப்படையிலாகும்
D – வன்முறை நிகழ்ச்சிகள் ஊடாக ஊடகங்கள் சமூக நோக்கை அடைகின்றன
மேற்படி கூற்றுக்களில் வன்முறைக் கவர்ச்சி செயன்முறையுடன் நெருக்கமானவை
(1) A யும் C யும்
(2) B யும் D யும்
(3) A யும் D யும்
(4) A யும் Bயும் C யும்
(5) A, B, C, D ஆகியன எல்லாம்

(50 x 2 = 100 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

- ❖ ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
- ❖ ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.

01) ஆற்றின் வரம்பொன்றில் அமர்ந்து கொண்டிருக்கின்ற ஒருவர் ஆற்றையே பாரத்துக் கொண்டு இருக்கின்றார்.

(i) இங்கு நடைபெற்றிருக்கக் கூடிய தொடர்பாடல் வகையினையும், வடிவத்தினையும் பெயரிடுக.

(ii) மேற்குறித்த விபரிப்பில் காணப்படாத தொடர்பாடல் வகைகள் இரண்டினைப் பெயரிட்டு அவற்றின் இரண்டு விசேட தன்மைகளை ஒவ்வொரு வகைக்கும் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(iii) செவிமடுத்தல் செயன்முறையின் நான்கு கட்டங்களைப் பெயரிட்டு, சுருக்கமாக விளக்குக.

(iv) கூட்டுத் தொடர்பாடல் வினைத்திறன் மிக்கதாகவும் விளைதிறன் மிக்கதாகவும் அமைவதற்கு பல்வேறு உபகரணங்கள் பயன்படுகின்றன. அந்த வகையில் பின்வரும் வகைகளுக்கான இரு எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிட்டு விபரிக்க.

a) பேச்சுத்தொடர்பாடல் உபகரணம்

b) எறிவைசார் தொடர்பாடல் உபகரணம்

c) எறிவைசாரா தொடர்பாடல் உபகரணம்

d) சூழல்சார் மற்றும் ஆக்க உபகரணம்

02) "ரவி சிறு வயது முதலே கிரிக்கட் விளையாடுவதில் ஆர்வம் கொண்டிருந்தான். பாடசாலையிலும் அவன் கிரிக்கட் அணியில் இணைந்து தொடர் பயிற்சி பெற்று வருகின்றான்"

(i) சுய எண்ணக்கரு என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

(ii) ஒருவன் தனது சுய எண்ணக்கரு தொடர்பாக மதிப்பீடு செய்து அதன் ஒவ்வொரு பிரிவுகளையும் விருத்தி செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு விருத்தி செய்யப்பட வேண்டிய மூன்று பிரிவுகளும் எவை?

(iii) கற்றல் தொடர்பான இரு பிரதான கோட்பாடுகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்று பற்றி சுருக்கமாக விளக்குக.

(iv) மொழி என்பது மனிதன் கண்டறிந்த உன்னதமான தொடர்பாடல் கருவியாகும். மொழியின் பயன்பாடுகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக.

agaram.lk

03) பிரசித்திபெற்ற கலாசாரத்தினால் மனித நடத்தைகள் சிந்தனைகள் மற்றும் மதிப்புக்களின் தொகுதி, உணர்ச்சி மற்றும் அறிவு மட்டம் கூட மாற்றியமைக்கப்படுகின்றது

(i) பிரசித்தமான பண்பாட்டின் (Popular Culture) நான்கு அடிப்படைப் பண்புகளைப் பெயரிடுக.

(ii) ஊடகத்துக்கும் கலாசாரத்துக்குமிடையிலான வேறுபாட்டினைக் குறிப்பிடுக.

(iii) ஊடகப் பண்பாட்டின் நான்கு இயல்புகளைப் பெயரிட்டு அவற்றுள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக.

(iv) ஊடகப் பண்பாட்டால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகள் பற்றி நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டுரையொன்று வரைக.

04) (i) அபிவிருத்தித் தொடர்பாடலில் (Development Communication) ஈடுபடும் ஊடகவியலாளர் ஒருவர் பல்வேறு திறன்களைத் தன்வசம் கொண்டிருக்க வேண்டியவர் ஆகின்றார். அவற்றுள் நான்கைப் பெயரிடுக.

(ii) அபிவிருத்தி தொடர்பாடல் குறித்த சீன மாதிரி எக்கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது என்பதனைக் குறிப்பிட்டு, சீன அபிவிருத்தி தொடர்பாடலின் பிரதான நோக்கங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.



Scanned with CamScanner

(iii) காந்தியின் தொடர்பாடல் பாவனையின் போது இந்திய மக்கள் கலாசாரமும், பகவத்கீதையும் பயன்படுத்தப்பட்டது. அந்த வகையில் காந்தியடிகளின் அபிவிருத்தி தொடர்பாடல் பற்றி சுருக்கமாக விபரிக்க.

(iv) எந்தவொரு நாட்டிலும் அபிவிருத்தித் தொடர்பாடல் முன்னோடிகள் காணப்படுகின்றன. அந்த வகையில் இலங்கையிலும் அரசாங்கம் மற்றும் பிரசைகளின் மட்டத்தில் அபிவிருத்தித் தொடர்பாடல் முன்னோடிகள் காணப்படுகின்றது. தேசிய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பின்வரும் அமைப்புகள் பற்றிச் சுருக்கக் குறிப்புரை தருக.

a) சர்வோதய இயக்கம் (பிரசைகள் அமைப்பு)

b) சணச இயக்கம் (பிரசைகள் அமைப்பு)

c) சமுர்த்தி இயக்கம் (அரச அமைப்பு)

d) சுகாதார கல்வி சேவைப் பிரிவு (அரச அமைப்பு)

05) வீட்டுச் சமாதானம் தகர்வுறுதல் தொடர்பான தகவல்கள் இலங்கையின் நாளிதழ்களில் அடிக்கடி தெரிவிக்கப்படுகின்றன.

(i) வீட்டுச் சமாதானம் தகர்வுறுவதற்கு ஏதுவான நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) பத்திரிகை ஊடகங்களில் வன்செயல் வெளிப்படுத்தப்படும் நான்கு விதங்களைச் சுருக்கமாக விளக்குக.

(iii) தொலைக்காட்சியில் காணும் வன்செயலுக்கு ஏதுவான நான்கு பிரதான விடயங்களைக் குறிப்பிட்டு, அவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

(iv) ஒரு நிறுவனத்தில் உள்ளக முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக நீங்கள் பணிக்கு அமர்த்தப் பட்டுள்ளீர்கள். அதன்பொருட்டு நான்கு பொது சனத்தொடர்பு முறைகளைப் பிரேரித்து அவற்றுள் இரண்டை விவரமாக விளக்குக.

06) (i) கிளை மொழியின் (Dialect) நான்கு குணாதிசயங்களை எடுத்துரைக்க.

(ii) தொடர்பாடலின் பணிகள் நான்கைப் பெயர் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டு பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக.

(iii) இணையம் எவ்வாறு ஏனைய ஊடகங்களிலிருந்து வேறுபடுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் நான்கு வழிகளை எடுத்துரைத்து அவற்றுள் இரண்டு தொடர்பில் விளக்கம் தருக.

(iv) வெகுஜன தொடர்பாடல் செயன் முறையில் வாயில் காப்புடன் தொடர்புறும் நான்கு நபர்களை பெயரிட்டு, குறித்த துறையில் அவர்களின் வகிபங்கை ஆராய்க.

07) உமது பாடசாலையின் வரவேற்பு நிலைக்குச் சமீபமான அறிவிப்புப் பலகையில் “இவ்வருடம் தேசிய மட்ட நிகழ்வுகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள்” எனப் பெயரிடப்பட்ட புகைப்படமொன்று காட்சிப் படுத்தப்பட்டிருந்தது.

(i) மேற்குறித்ததைத் தவிர்ந்த, உள்ளகப் பொதுசனத்தொடர்பின் (Internal public relations) நான்கு வழிமுறைகளைப் பெயரிடுக.

(ii) பொதுசனத் தொடர்புத்துறையில் செல்லிடத் தொலைபேசிகளின் இரண்டு பயன்களையும் இணையத்தளங்களினது இரண்டு பயன்களையும் சுருக்கமாக விளக்குக.

(iii) பொதுசனத் தொடர்பை விளம்பரத்துறையிலிருந்து வேறுபடுத்தி நிற்கும் முக்கிய அம்சத்தைப் பெயர் குறிப்பிட்டு, நுகர்வோருக்கு விளம்பரங்கள் வழியே கிடைக்கும் ஐந்து பயன்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(iv) வெளியகப் பொதுசனத் தொடர்புக்காகப் பயன்படுத்தப்படும் நான்கு கருவிகளையும் முறைகளையும் உதாரணங்களுடன் விளக்குக.



agaram.lk
Scanned with CamScanner

FWC

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | புள்ளித்திட்டம் | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் |
|---|---|---|

### தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 2 | 11) | 5 | 21) | 4 | 31) | 4 | 41) | 2 |
| 02) | 2 | 12) | 4 | 22) | 1 | 32) | 3 | 42) | 4 |
| 03) | 1 | 13) | 3 | 23) | 3 | 33) | 3 | 43) | 1 |
| 04) | 1 | 14) | 1 | 24) | 1 | 34) | 4 | 44) | 2 |
| 05) | 5 | 15) | 1 | 25) | 5 | 35) | 1 | 45) | 5 |
| 06) | 1 | 16) | 5 | 26) | 5 | 36) | 1 | 46) | 1 |
| 07) | 5 | 17) | 4 | 27) | 2 | 37) | 3 | 47) | 5 |
| 08) | 1 | 18) | 1 | 28) | 1 | 38) | 4 | 48) | 3 |
| 09) | 4 | 19) | 3 | 29) | 5 | 39) | 4 | 49) | 3 |
| 10) | 5 | 20) | 3 | 30) | 4 | 40) | 4 | 50) | 3 |

(50X 2 = 100 புள்ளிகள்)

### தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் - II

(01)

(i) அகமுகி / நபரகத் தொடர்பாடல்
வடிவம்
கட்புல வடிவம்

agaram.lk

$1 \times 2 = 2$ புள்ளிகள்

(ii) ஆளிடை தொடர்பாடல்
கூட்டுத் தொடர்பாடல்

$\frac{1}{2} \times 2 = 1$ புள்ளிகள்

ஆளிடை தொடர்பாடல்

- இருவருக்கிடையில் நடைபெறும்
- நேருக்கு நேர் / கருவிகளின் துணையுடன் நடைபெறும்

கூட்டுத் தொடர்பாடல்

- ஒரு நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டது
- இரண்டுக்கு மேற்பட்டவர் பங்கெடுப்பார்கள்

$1\frac{1}{2} \times 2 = 3$ புள்ளிகள்

மொத்தம் 4 புள்ளிகள்

(iii) கேட்டல், விளக்குதல், மதிப்பிடல், எதிர்விளைவு

$\frac{1}{2} \times 4 = 2$ புள்ளிகள்

(நான்கு பண்பும் விளக்கியிருந்தால் நான்கு புள்ளி)

$2 + 4 = 6$ புள்ளிகள்

(iv) உதாரணங்களுடன் விளக்கியிருந்தால் மட்டும் முழு புள்ளி இடுக. (8 புள்ளிகள்)



Scanned with CamScanner

(02)

(i) சுய எண்ணக்கரு என்பது ஒருவர் தனது ஆற்றல்கள், தேர்ச்சிகள், தோற்றம், சமூக அங்கீகாரம் பற்றிக் கொண்டுள்ள மனப்பாங்கு, உணர்வுகள், அறிவு என்பவையாகும்.

(8 புள்ளிகள்)

(ii) மூன்று பிரிவுகள்

1. உடல் இயல்பு பற்றிய சுயஎண்ணக்கரு
2. ஆற்றல்கள் பற்றிய சுயஎண்ணக்கரு
3. சமூக அங்கீகாரம் பற்றிய சுய எண்ணக்கரு

(4 புள்ளிகள்)

(iii) தூண்டல் - துலங்கல் கொள்கை

களஅறிகைக் கொள்கை (2 புள்ளிகள்)

(விளக்கம் உதாரணங்களுடன் தரப்பட்டால்) (4 புள்ளிகள்)

மொத்தம் 6 புள்ளிகள்

(iv) பேச்சு

ஆற்றுகை

விவரணம்

உரை

பிரதியாக்கம்

$(\frac{1}{2} \times 4 = 2$ புள்ளிகள்)

விளக்கம் தரப்பட்டால் 6 புள்ளிகள்

மொத்தம் 8 புள்ளிகள்

(03)

(i) சமூக நடத்தையின் மீது தாக்கத்தை உருவாக்குதல் வணிக அதிசயங்களின்பால் மையப்படுத்தப்பட்டு பரந்துபட்டது.

நாட்டாரியல் பண்புகள் உள்ளடங்கிறது

இடம், நேரம் மாற்றத்திற்கு உட்படக்கூடியது

(ii) கலாசாரம் என்பது அறிவு, வழிபாடு, நம்பிக்கை, சட்டம், சம்பிரதாயங்கள் மற்றும் சமூகத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் மனிதன் தனதாக்கிக் கொண்ட பழக்க வழக்கம் ஆற்றல் அடங்கிய கருத்துத் தொகுதியாகும்.

கலாசாரத்தின் மீது ஊடகத்தின் செல்வாக்கு அதிகரிப்பதன் பெறுபேறாக ஊடக கலாசாரம் உருவாகின்றது (4 - புள்ளிகள்)

(iii) ஊடகப் பண்பாடு தொழில்நுட்பத்தோடு பின்னிப்பிணைந்த ஒன்று

அவசியமற்ற தேவைகளை மக்களிடையே உருவாக்க வல்லது

சமூக மாற்றம் அல்லது புதிய சமூகத்தை உருவாக்க காரணமானது

பூகோளமயமாதலுடன் தொடர்புடையது.

இயல்புகள் குறிப்பிட்டால் - 2 புள்ளிகள்

விளக்கம் தந்திருந்தால் - 4 புள்ளிகள்

மொத்தம் 6 புள்ளிகள்

(iv) மேற்கத்தேய கலாசாரம்

சந்தைப்படுத்தும் நோக்கு

அவசியமற்ற தேவைகள் உருவாகல்

உணவுப்பழக்கவழக்கம் மாற்றம்

$(\frac{1}{2} \times 4 = 2$ புள்ளிகள்)

விளக்கம் - 6 புள்ளிகள்

மொத்தம் - 8 புள்ளிகள்



agaram.lk
Scanned with CamScanner

(04) (i) சமூகத்தைப் புரிந்து கொள்ளல்
தொழினுட்ப ஊடகங்களைப் பயன்படுத்தும் ஆற்றல்
அளிக்கை செய்யும் திறன்கள்
மொழியைப் பயன்படுத்தும் ஆற்றல் (2 புள்ளிகள்)

(ii) சோவியத் சமவுடமை தொடர்பாடல் எண்ணக்கரு (1 புள்ளி)
1. சீன அபிவிருத்தி தொடர்பாடல் மாதிரி
2. பிரதேச குழுக்களாக மக்கள் செயற்படல்
3. மக்கள் சிந்தனை பங்களிப்பு வலுப்பெறல்
4. கீழிருந்து மேல்நோக்கிய தொடர்பு (3 புள்ளிகள்)

(iii) ஆங்கில எதிர்ப்பு - உப்புச்சத்தியாக்கிரகம்
ராட்டினம் - உள்ளூர் உற்பத்தி
சுயராச்சியம்
6 புள்ளி (விளக்கம் தரப்படல்)

(iv) நான்கு இயக்கம் பற்றிய செயற்பாடு
விளக்கம் தரப்படல் $2 \times 4 = 8$ புள்ளிகள்

(05) (i) தவறான வார்த்தைப் பிரயோகங்கள்
கோபப்படுதல்
ஒருவர் மீது ஒருவரான வெறுப்பு
சந்தேகப்படுதல்
(2 புள்ளிகள்)

(ii) செய்தித் தலையங்கத்தின் ஊடாக
புகைப்படங்கள் / கேலிச்சித்திரங்கள்
கொலை, களவு, பலாத்காரம் முதலான செய்தி
அறிக்கைப்படுத்தும்முறை
தேசிய இன மத முரண்பாடுகளை ஏற்படுத்தும் செய்திகள்
(4 புள்ளிகள்)

(iii) சண்டைக் காட்சிகள்
முரண்பாட்டுச் சூழ்நிலைகள் உயர் மட்டத்திற்குச் செல்லுதல்
சிறுவர் துன்புறுத்தப்படும் காட்சிகள்
பெயர்கள் அடக்குமுறைகள்
உயிர்ச் சேதம்
பொருட்கள் அழித்தல்

(iv) சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல்
விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல்
கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்
விழாக்களை நடாத்துதல்

($\frac{1}{2} \times 2 = 2$ புள்ளிகள்)
விளக்கம் - 3 புள்ளிகள்
மொத்தம் - 8 புள்ளிகள்

(06) (i) பிரதான மொழியின் இயல்புகள் காணப்படும்
பிரதான மொழியிலிருந்து பிரிந்து சென்றது
அந்தந்த இனக்குழுவின் தொடர்பாடலுக்குப் பயன்படும்
துணைக்கலாசாரம் சார்ந்தது
(2 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

(ii) செய்தி உருவாக்கம் / தகவளித்தல்
கல்வி வழங்குதல்
கலாசாரப்பணி
சமூக ஒழுங்கமைப்புப் பணி / சமூகமயமாக்கல் (4 புள்ளிகள்)

(iii) புவியியல் எல்லைகளைக் கடந்தது
வேகமான தகவற் பரிமாற்றம்
கணினியறிவு அவசியமானது
எங்கிருந்தும் எவ்வேளையிலும் பயன்படுத்தலாம் (6 புள்ளிகள்)

(v) செய்தியாளர்கள்
பத்திரிகை ஆசிரியர்கள்
உடக உரித்துடைமையாக்கல்கள்
ஊடக முகாமையாளர்
உதவி ஆசிரியர்கள் (8 புள்ளிகள்)

(07) (i) உவகைதரும் அல்லது மனத்திற்கு இன்பமளிக்கக்கூடிய சூழலை உருவாக்குதல்
உளவளத்துணை அல்லது ஆற்றுப்படுத்தும் சேவைகள் நடாத்துதல்
சுற்றுலாக்களை மேற்கொள்ளல்
ஒன்றுகூடல்களை மேற்கொள்ளல் (2 புள்ளிகள்)

(ii) செல்லிடத் தொலைபேசிகள்
உடனடித் தொடர்பு
பல்வழிச் செயற்பாட்டுத் தொடர்பாடல் வசதி
மீள் நினைவூட்டுதல்களை அனுப்புதல்
வாழ்த்துக்களை அனுப்புதலும் பெறுதலும்

இணையம்
தகவல்களைப் பெறுதல் / அனுப்புதல்
வெளிப்பாடுகள் தெரியப்படுத்தலாம்
புதிய சேவைகள் பொருட்களது ஆதாயம்
தொடர்பில் தகவல்களை பெறலாம்
நிறுவனத் தொடர்புகள் அதிகரித்தல் (4 புள்ளிகள்)

agaram.lk

(iii) பொதுசனத்தொடர்பு கூட்டுறவுக்கான நலனோம்புக்கான, மதிப்பை அதிகரிப்பதற்கான தகவல்களைக் கட்டணம் இன்றி வழங்குவது
விளம்பரம் என்பது இலாபமீட்டலை நோக்கமாகக் கொண்டு செய்யப்படும் கட்டணம் செலுத்தப்பட்ட பிரபல்யம் தேடல்

புதிய பொருட்கள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்துவது
கல்வி வேலைவாய்ப்புத் தகவல்கள் வழங்குவது. விலைகள் பற்றிய விபரங்களை வழங்குவது
பொதுசன அபிப்பிராயத்தை மாற்றுதல்

(iv) அச்சு ஊடகம்
கட்புல, செவிப்புல ஊடகம்
புகைப்படங்கள்
கண்காட்சிகள்
ஊடகத் தொடர்பு
அனுசரணையாளர்
கற்றாடற் கருவிகள்



Scanned with CamScanner